9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(உ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவை விதி 25(1)-ன் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை,

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.36 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

205. தஞ்சாவூர், திருவாளர்கள் தென்மண்டல கலாச்சார நிலையத்தினால் சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியக வளாகத்தினுள் கைத்திறப் பொருட்கள் உற்சாக விழாவில் விற்கப்பட்ட கைதிறப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 18—11—1992 ஆம் நாளிட்ட 53-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]